THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

Friday, 27th April 1962.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Agricultural College (Coimbatore)

*13 *Q.*—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether there is any proposal for developing the Agricultural College at Coimbatore into a University; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI P. KAKKAN: (*a*) & (*b*) Yes. The proposal is under consideration.

SRI M. KALYANASUNDARAM: சர்க்கார் ஆலோசித்திருக்கக் கூடிய திட்டத்தின் விவரம் என்ன என்று கூற முடியுமா?

THE HON. SRI P. KAKKAN: கமிட்டி நான்கு தரம் கூடி பரிசீலனை செய்தது. பெரும்பகுதி செலவு கொடுக்கவேண்டுமென்று மத்திய சர்க்காரைக் கேட்டிருந்தோம். ஆனால் அவர்கள் 25 லட்சம் தான் கொடுக்கமுடியும் என்று சொன்னார்கள். மீதியை மாகாண சர்க்கார் போடவேண்டுமென்று சொன்னார்கள். மீண்டும் பரிசீலனை செய்யப்படவேண்டுமென்று மத்திய சர்க்காருக்கு எழுதினோம். மத்திய சர்க்காரிடமிருந்து வந்த தகவலை டைரக்டர் ஆப் அக்ரிகல்சர் அவர்கள் பரிசீலனைக்கு அனுப்பி இருக்கிறோம். அவர்களுடைய ரிப்போர்ட்டு வந்ததும் ஒரு முடிவு எடுக்கப்படும்.

SRI M. KALYANASUNDARAM: இது சம்பந்தமாக ஜூன் மாதத்திற்கு முன்னதாக ஒரு முடிவு எடுக்கமுடியுமா?

THE HON. SRI P. KAKKAN: எப்படி இப்போது சொல்ல முடியும்? அக்ரிகல்சரல் டைரக்டர் பரிசீலனை செய்து ரிப்போர்ட் அனுப்பிய பிறகுதான் சொல்லமுடியும்.

SRI C. CHIRANJEEVULU NAIDU: In view of the Panchayat Unions Act and also the recruitment of agricultural graduates as Extension Officers and Panchayat Union Commissioners, will the Government feel the desirability of having a subject on local administration included in the syllabus at the Agricultural College, Coimbatore?

THE HON. SRI P. KAKKAN: The question is about agricultural university and not about the agricultural college.

[27th April 1962

SRI M. KALYANASUNDARAM : இப்போது விவசாயக் கல்லூரியை பல்கலைக் கழகமாக ஏற்படுத்தினால் என்னென்ன அனுகூலங்கள் ஏற்படுமென்று அரசாங்கம் எதிர்பார்க்கிறது ?

THE HON. SRI P. KAKKAN : அப்படிச் செய்வதினால் அனுகூலங்கள் இருக்கின்றன. யூனிவர்சிடியாக மாற்றவேண்டுமானால் அதற்கு எவ்வளவு செலவாகும் என்பது பின்னால் தெரியும்.

Cement factory

* 14 Q.—SRI S. MADHAVAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there was any proposal to establish a cement factory in East Ramanathapuram;

(*b*) if so, when;

(*c*) the total amount to be invested in it; and

(*d*) the number of persons to be employed in it?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) An application has been made to the Government of India for the grant of a licence for the establishment of a cement factory in East Ramanathapuram district, in the private sector.

(*c*) & (*d*) As the industry is proposed to be established in the private sector, it is not possible to disclose further details.

SRI S. MADHAVAN : எந்த இடத்தில் வைக்கப்படும் என்று சொல்ல முடியுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இதுகூட இப்போது சொல்ல முடியாது.

SRI M. KALYANASUNDARAM : சிமெண்டு பற்றுக்குறை மிக அதிகமாக இருப்பதன் காரணத்தினால் திருச்சி ஜில்லாவிலும், சேலம் ஜில்லாவிலும் தொழிற்சாலைகள் ஆரம்பிக்கும் உத்தேசம் எந்த நிலையில் இருக்கிறது ?

THE HON. SRI R. VENKATARAMAN : சேலம் ஜில்லாவிலே சங்கரிதுர்க்கிலே ஒரு சிமெண்ட் தொழிற்சாலை ஏற்படுத்த லைசன்ஸ் வழங்கியாகிவிட்டது. கரூர் திண்டுக்கல்லில் ஒரு பெரிய அளவில் சுண்ணாம்புக் கல் கிடைப்பதுபற்றி ஆராய்ச்சி செய்யப்பட்டது. இப்போது கிடைத்த தகவல்படி அங்கு 5 லட்சம் டன் உற்பத்தி செய்யக்கூடிய ஒரு தொழிற்சாலைக்கு சாங்க்ஷன் கொடுக்கப்பட்டது.

SRI T. L. SASIVARNA THEVAR : கிழக்கு ராமநாதபுரத்தில் இருக்கும் தொழிற்சாலையை மண்டபத்திற்கு மாற்றுவதாக பிரஸ்தாபிக்கப்படுகிறது. இது உண்மையா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இந்த இடத்தில் தொழிற்சாலை தனியார் துறையில் வைக்கப்படுவது. எந்த இடத்தில் வைத்தால் லாபகரமாகவும் வெற்றிகரமாகவும் இருக்குமென்று நினைக்கிறார்களோ அந்த இடத்தில் அவர்கள் வைப்பார்கள்.